# இலங்கை முஸ்லிம் விவாக விவாகரத்து சட்டம் மீள்திருத்தப்பட வேண்டியதன் முக்கியத்துவம்: சவால்களும் தீர்வுகளும்

## IMPORTANCE OF REFORMING THE SRI LANKAN MUSLIM MARRIAGE AND DIVORCE ACT: CHALLENGES AND SOLUTIONS

Dr. A.P.M. Abbas

*Senior Lecturer, Jamiah Naleemiah Sri Lanka*

apmabbas@naleemiah.edu.lk

**Summary**

*Personal law refers to the legal framework that safeguards the laws, customs, and practices of distinct groups based on religious, cultural, or regional identities within a country, preserving their unique characteristics. In the Ottoman Empire, issues pertaining to Muslim Family Matters were addressed through ijtihad until the compilation of the "Qanunu Hukuq al-Aila" in 1917. In Sri Lanka, the Muslim Personal Law encompasses the Muslim Marriage and Divorce Act of 1951, which governs family matters within the Muslim community. This act is integral to regulating the daily affairs of families, which are regarded as fundamental to society, with a particular focus on the rights and duties of women. However, it is perceived to present a misrepresentation of Islam and Muslims within the current legal system. Amendments to this law are seen as essential to safeguarding family integrity, rectifying injustices, and portraying a more accurate image of Muslim Personal Law. Muslim Personal Law is also adaptable, with provisions that can evolve with changing times. Embracing necessary changes is crucial to demonstrating the enduring nature of Islam. The lack of consensus within the Muslim community has resulted in delays in private law reforms, compounded by a lack of understanding of Islamic law. Efforts to amend the law should prioritize consensus-building, recognize the necessity for change, and ensure amendments are crafted to enhance the reputation of Islam, safeguard human interests, and uphold justice.*

## *1.* அறிமுகம்

தனியார் சட்டம்: ஒரு நாட்டின் மத, கலாசார, பிரதேச அடிப்படைகளில் வாழ்கின்ற தனித்துவமான குழுமங்களின் தனித்துவங்களைப் பேணும் வகையில், அவர்கள் பின்பற்றுகின்ற, அவர்களுக்கே உரித்தான சட்டங்கள், நடைமுறைகள், வழக்காறுகள் முதலானவற்றை அவர்களுக்கு உடைத்தாக்கும் சட்டம் தனியார் சட்டம் எனப்படும்.

முஸ்லிம் தனியார் சட்டம்: “இது சட்டங்கள், விதிகள், குடும்ப அமைப்பினுள்ளே தொடர்புகளை ஒழுங்குபடுத்தும் கிளைசட்டங்கள் என்பவற்றை குறிக்கும். திருமணப்பேச்சு வார்த்தை மற்றும் திருமணம், மஹர், மனைவிக்கான செலவினங்கள், கணவன் பாலான கடமைகள், தலாக், நீதிபதி கணவன் மனைவியை பிரித்து வைத்தல், பஸ்ஹ், குல்உ, பரம்பரை, பால்குடி, பிள்ளைகளின் பராமரிப்பு, வாரிசுச்சொத்து, மரண சாசனம், வக்ப் தொடர்பான சட்டதிட்டங்கள் அனைத்தையும் இது உள்ளடக்கியது”[1].

உஸ்மானிய சாம்ராஜ்யத்தில் 1917ம் ஆண்டு “கானூனு ஹுகூக் அல் ஆஇலா” தொகுக்கப்படும் வரை இத்துறை சார்ந்த பிரச்சினைகள் இஜ்திஹாத் மூலம் தீர்க்கப்பட்டு வந்தன.

தனியார் சட்டம் எனும் சொல் முதலில் இத்தாலியில் பயன்படுத்தப்பட்டு வந்தது. (கி.பி. 12-13ம் நூற்றாண்டு). இத்தாலியில் அப்போது உரோம சட்டங்கள் அமுலில் இருந்தன. ஒரு நகரம் மாத்திரம் இதற்கு விதிவிலக்காக இருந்தது. அங்கு அம்மக்களுக்கே உரிய, பிரத்தியேகமான சட்டம் அமுலில் இருந்தது. இச்சட்டத்தை குறிக்க “தனியார் சட்டம்” எனும் பிரயோகம் முதலில் பயன்படுத்தப்பட்டது.

பின்னர் பிரான்சியர்கள் இப்பிரயோகத்தை பயன்படுத்த துவங்கினர். அவர்கள் வாயிலாக முஸ்லிம் சமூகத்தில் இது வழக்கில் வந்தது. 1898ம் ஆண்டு எகிப்தை சேர்ந்த முஹம்மத் கத்ரீ பாஷா “கிதாப் அல் அஹ்காம் அஷ்ஷரஇய்யா பீ அல் அஹ்வால் அஷ்ஷக்சிய்யா( كتاب الأحكام الشرعية في الأحوال الشخصية) எனும் நூலை எழுதினார். முஸ்லிம் சமூகத்தில் முதன்முதலில் இவரே இப்பிரயோகத்தை பயன்படுத்தினார். அதன் பின்னர் இத்துறை சார் சட்டங்களை குறிக்க இப்பதம் பயன்பாட்டில் உள்ளது.

இலங்கை முஸ்லிம் தனியார் சட்டம்: தற்போது அமுலிலுள்ள முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் முஸ்லிம் தனியார் சட்டத்தினுள் உள்ளடங்கும் 1951 ஆம் ஆண்டின் முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டமே தற்போது அமுலிலுள்ளது.

## *2.* முக்கியத்துவம்:

[1] மஜ்மூஆ மின் அல் முஅல்லிபீன், மவ்ஸூஆ அல் மாபாஹீம் அல் இஸ்லாமிய்யா, பக்கம் 8.,

இச்சட்டம் அன்றாட வாழ்வுடன் சமூகத்தின் மிக முக்கிய அங்கமாக கருதப்படும் குடும்பங்களுடன் தொடர்புபடுகிறது. குறிப்பாக பெண்களின் உரிமைகளோடு, கடமைகளோடு தொடர்பு படுகிறது. தற்போதுள்ள அமைப்பில் இஸ்லாம் பற்றி, முஸ்லிம்கள் பற்றி தவறான அபிப்பிராயத்தை அது ஏற்படுத்துகிறது. இச்சட்டம் திருத்தப்படுவது குடும்ப அலகுகளை பாதுகாக்கவும், அநீதிகளை ஒழிக்கவும் முஸ்லிம் தனியார் சட்டம் பற்றிய நல்லபிப்பிராயத்தை ஏற்படுத்தவும் உதவும்.

## 3. சவால்கள்

***3.1 ஒருமித்த நிலைப்பாடின்மை:*** நீதியரசர் சலீம் மர்சூப் தலைமையில் 2009 ஆகஸ்ட் மாதம் நியமிக்கப்பட்ட 17 பேரைக்கொண்ட குழு 8வருடங்களையும் 4 மாதங்களையும் கடந்த பின்பே தன் அறிக்கையை சமர்ப்பித்தது. அக்குழு இரு குழுக்களாக பிரிந்து இரு அறிக்கைகளை சமர்ப்பித்தது. இச்சட்ட திருத்தத்தை மேற்கொள்வதற்கு தடையாக பல்வேறு காரணிகள் தொழிற்பட்ட போதிலும், அவற்றுள் மிகப்பிரதான காரணியாக ஒருமித்த நிலைப்பாடின்மையே காணப்படுகிறது.

> "முஸ்லிம் தனியார் சட்டத்தை திருத்த வேண்டும் என்ற முடிவுக்கு சமூகம் எப்போதோ வந்துவிட்டது என்றாலும் இதனை இன்றுவரை செய்ய முடியாமல் போனதற்கு கடும்போக்கு சக்திகளின் அழுத்தம், ஆட்சியாளர்களின் மனோநிலை, மனித உரிமை என்று சொல்லிக் கொண்டு திரியும் வெளிஅமைப்புகள், மதஉரிமை என்று விடாப்பிடியாக இருக்கும் தரப்பு ஆகியோரின் நடவடிக்கைகள் எல்லாம் காரணம் என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால், முஸ்லிம் தரப்பில் ஏற்பட்ட ஒருமித்த நிலைப்பாடற்ற நிலை, இதனை எல்லாம் விட முக்கிய காரணியாகியுள்ளது"[2].

***3.2. சரியான புரிதலின்மை:*** இஸ்லாம் என்றும் மாறாத நிலையான சட்டங்களையும் காலமாற்றத்துக்கு ஏற்ப மாறும் சட்டங்களையும் கொண்டுள்ளது. ஒரு கொள்கை அல்லது சட்டம் உலகில் நிலைக்க ஒரேநேரத்தில் அது மாறும், மறாத்தன்மைகளை கொண்டிருப்பது அவசியமாகும். இஸ்லாமிய சட்டம் அச்சிறப்பியல்பை கொண்டுள்ளது. அது எக்காலத்திலும் மாறாத ஒரு பகுதியை உள்ளடக்கியிருப்பது போல, கால மாற்றங்களுக்கு ஏற்ப நெகிழ்ந்து கொடுக்கும் ஒரு பகுதியையும் உள்ளடக்கியுள்ளது.

> "சில துறைகள் உள்ளன. அவற்றுடன் தொடர்புடைய தனித்தனியான, விரிவான சட்டங்கள் அருளப்பட்டுள்ளன. அவற்றை கூட்டவோ, குறைக்கவோ முடியாது. நம்பிக்கைகள், வணக்க வழிபாடுகள், ஒழுக்க விழுமியங்கள் இப்பிரிவில் அடங்கும். இன்னும் சில துறைகளுடன் தொடர்பான சட்டங்கள் அருளப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு பகுதி மாறாதது் நிலையானது. இன்னொரு பகுதி மரபுகளுக்கு, நிலைமைகளுக்கு ஏற்ப, சில பெறுமானங்களுக்கும் வரையறைகளுக்கும்

---

[2] *மொஹமட் பாதுஷா, (2022 டிசெம்பர் 21) , தனியார் சட்டம் படும்பாடு,* retrieved on 21/02/2024 from https://www.tamilmirror.

உட்பட்டு மாறக் கூடியது. குடும்பம்,குற்றவியல், கொடுக்கல்வாங்கல் சார் சட்டங்கள் இப்பிரிவில் அடங்கக் கூடியவை. வேறு சில துறைகள் காணப்படுகின்றன. அவற்றுடன் தொடர்புடைய கொள்கைகள், விதிகள்,இலக்குகள் மாத்திரமே அருளப்பட்டுள்ளன. இங்கு மனித ஆய்வுக்கு, திருத்தங்களுக்கு, வளர்ச்சிக்கு பாரிய பங்குண்டு. ஆட்சி, நிர்வாகத் துறைக்கு இது நன்கு பொருந்தும்”[3].

இப்புரிதல் திருத்தத்தை மறுப்பவர்களிடம் இருப்பதாகத் தெரியவில்லை. மாற்றத்தை வேண்டும் சிலர் மாறக்கூடியது எது? மாறாதது எது? என்ற தெளிவுடன் காணப்படுவதாக தெரியவில்லை.

***4. தீர்வு:*** முஸ்லிம் விவாக, விவாகரத்து சட்டம் திருத்தத்தை வேண்டி நிற்கிறது என்பதில் ஐயமில்லை. திருத்தத்தின் போது பின்வரும் அம்சங்களை கருத்தில்கொள்வது அவசியமானது என்பது எமது அபிப்பிராயமாகும்.

4.1. இஸ்லாத்தின் சிறப்பை, அதனது அழகை பிற சமூகங்களுக்கு எடுத்துரைக்கும் வகையில் இஸ்லாமிய சட்டத்தை முன்வைப்பது கடமை என்பதை ஒவ்வொரு தரப்பும் உணர்ந்து தொழிற்பட வேண்டும். இவ்விடயத்தில் முஸ்லிம் சமூகம் விடுகின்ற தவறு இஸ்லாமிய சட்டங்களை மனித சட்டங்களை விட தாழ்ந்ததாக காட்டும் என்பதை மறத்தலாகாது.

4.2. கருத்து முரண்பாடுகளுக்கு உட்பட்ட ஒவ்வொரு விடயத்திலும் ஒரு கருத்தை தெரிவு செய்யும்போது, எக்கருத்தை தெரிவு செய்வது இந்த சூழலுக்கு மிகவும் ஏற்றது, நலன்களுக்கு உகந்தது என்பது கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.

## *5. இறுதியாக...*

5.1. முஸ்லிம் தனியார் சட்டம் கால மாற்றங்களுக்கு ஏற்ப மாறும் ஒரு பகுதியையும் கொண்டுள்ளது.

5.2. தேவையான போது மாற்றங்களுக்கு இடமளிப்பது இஸ்லாம் எக்காலத்துக்கும் ஏற்றது என்பதை நிறுவ வழியாகும்.

5.3. முஸ்லிம் சமூகம் ஒருமித்த நிலைப்பாட்டுக்கு வர முடியாது இருக்கின்றமை தனியார் சட்ட சீர்திருத்தத்தை தள்ளிப்போட வைத்துள்ளது.

---

[٣] **أحمد الريسوني،(٢٠٢٣)، أحكام الدين وأحكام الدنيا في الفكر الإسلامي، تمت المراجعة ٠١/٠٣/٢٠٢٤ من https://raissouni.net/9264.**

5.4. இஸ்லாமிய சட்டம் பற்றிய புரிதலின்மையும் திருத்த முயற்சிகளுக்கு தடையாக அமைந்துள்ளது.

5.5. திருத்தம் தேவை என்ற இணக்கப்பாட்டை பயன்படுத்தி, திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

5.6. திருத்தங்கள் செய்யும் வேளை, இஸ்லாத்துக்கு ஏற்படுத்தப்படும் அவப்பெயரை அகற்றும் வகையிலும், மனித நலன்களை பேணும் வகையிலும், நீதியை நிலைநாட்டும் வகையிலும் அவை மேற்கொள்ளப்பட வேண்டும்.